# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்-18 இதழ்-7 ஜுலை-2005



வெளியிடுவோர்


## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம்-638 701. தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382, 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. ஜெபத்தின் மீது நாம் ஏன் நம்பிக்கை வைக்கிறோம்? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 16
4. வாலிபர் பகுதி ........ 19
5. சிறுவர் பகுதி ........ 23
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 25
7. ஒன்றை நான் கேட்டேன் ........ 30

# THIRUMARAI AASAAN

Published by Church of Christ

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 18 JULY . 2005 Issue - 7**


*ஆசிரியர் உரை*

# யாருக்காகத் தூக்கு மரம்?

மகத்துவமும், மாட்சிமையும் நிறைந்த பரலோகத்தின் தேவனால், இப்பாழுலக் மாந்தர்களாகிய நமக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்ட இரண்டு மாபெரும் ஈவுகளில், முதலாவது இடத்தைப் பிடிப்பது அவருடைய ஒரே பேரான குமாரனை நமக்காக ஈந்தது. அடுத்தது, தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ள அவருடைய வார்த்தைகளடங்கிய பரிசுத்த வேதாகமம். அறுபத்தாறு புத்தகங்கள் அடங்கிய இவ்வேத களஞ்சியத்தில் உள்ள ஒவ்வொரு நூலுக்கும் ஒரு சிறப்பு உண்டு. அச்சிறப்புகளுக்குச் சிறப்புச் சேர்க்கும் தகுதி சில நூல்களுக்கு மாத்திரமே உண்டு. அச்சிறப்பை, அந்நூலுக்கான தனித்தன்மை என்றும் நாம் கூறலாம். அப்படிப்பட்ட தனித்தன்மைக்குத் தனியிலக்கணம் வகுத்து நிற்கும் ஓர் நூல் தான் எஸ்தரின் சரித்திர புத்தகம். பத்து அதிகாரங்களைக் கொண்ட இந்நூலில், உன்னதரின் உயரிய பாதுகாப்பும், தேவாதி தேவனின் தெய்வீக வழிநடத்துதலும் அவருடைய ஜனங்களாகிய யூதர்களின் மீது ஆச்சரியப் படத்தக்க விதத்தில் இருந்தாலும், தேவன், கர்த்தர், ஆண்டவர் போன்ற வார்த்தைகள் இந்நூலில் அறவே இல்லை. ஒருவேளை, உன்னதப்பாட்டு நூலிலும் இல்லையென்பது உண்மையாக இருந்தாலும், இரண்டும் அடிப்படையில் வெவ்வேறானவை.

இந்த எஸ்தர் புத்தகத்தைக் கிட்டி நோக்கினால், இன்னொரு வகையிலும் இந்நூல் மற்ற நூல்களிலிருந்து விலகி நிற்கிறதென்பது புரியும். ஆம், **தூக்கு மரம்** என்று இந்நூலில் மாத்திரம் இருப்பதை நாம் காணலாம். நான்று கொண்டு செத்தான் என்று வேறு சில நூல்களில் இருந்தாலும், அவைகள் தூக்குமரம் என்ற வார்த்தையை நேரிடையாகப் பயன்படுத்துவதில்லை.

பொதுவாக, தூக்குமரம், தூக்குக் கயிறு, தூக்குப் போடுதல் போன்ற வார்த்தைகள் நம்மவர்களால் விரும்பிப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளல்ல. அபசகுணமான சொல் என்று எண்ணி உச்சரிக்கவே தயங்குவர். குறிப்பாகத் தேவன் மீதும் அவருடைய வார்த்தைகளின் மீதும் நம்பிக்கையுள்ளவர்களுக்கு, இவ்வார்த்தைகளைப் பற்றிய சிந்தனை, மூளையின் ஒரு மூலையிலே கூட வராது. ஏனெனில், தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்வது தேவனுக்கு விரோதமானது (பிர.8:8). அப்படிப் பட்டவர்கள், அதுவரை எவ்வளவு நீதியான வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும், தங்களது மறுமையைத் தேவாதி தேவனோடு கழிக்கவே முடியாது.

நாமறிந்த வகையில் தூக்குக் கயிறுக்கும், தூக்கில் தொங்குபவர் களுக்கும் எப்போதும் நெருங்கிய தொடர்பு இருக்கும். ஒரு சில சம்பவங்களைத் தவிர்த்து, தூக்கில் தொங்குபவர்கள் தான் தூக்குக் கயிறுக்கு ஏற்பாடு செய்வர். ஆனால், தூக்கு மரத்திற்கும், அதில் தூக்கப்படு பவருக்கும் பெரும்பாலும் தொடர்பே இருக்காது. யாரோ ஒருவருக்குத் தண்டனை கொடுப்பதற்காக, சம்பந்தமில்லாத ஒருவர் தூக்குமரத்தை ஏற்படுத்துவார். ஆனால், நம்முடைய எஸ்தர் நூலிலோ, **தூக்கு மரத்தை நாட்டிட ஏற்பாடு செய்தவனே அதிலே தொங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது.** தன்னாலே மிகுந்த குதூகலமாக ஏற்படுத்தப்பட்ட தூக்கு மரம் தனக்கே கேடாக மாறும் என்று அவன் துளியும் எண்ணியிருக்க மாட்டான். ஆம், தன்னுடைய தவறான செய்கையால், தான் ஏற்படுத்தின தூக்குமரத்தில், தானே தொங்க வேண்டியதாயிற்று.

சரி, இது பற்றி இன்னும் கொஞ்சம் விபரமாகத் தெரிந்து கொள்ள, நமது வழக்கத்தின்படி இந்நூலின் பின்னணி பற்றியும், இச்சம்பவத்தின் பின்னணி பற்றியும் கொஞ்சம் பார்த்து விடுவோமா?.

இந்தியா முதல் எத்தியோப்பியா வரைக்குமான நூற்று இருபத்தேழு நாடுகளுக்கும் ராஜாதி ராஜாவாக இருந்த அகாஸ்வேரு, தன் ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்திலே, ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு பண்ணி, அதற்கு தன் கீழுள்ள சகல தேசங்களின் அதிபதிகளையும் பிரபுக்களையும் அழைத்திருந்தான். தன் கீர்த்தியை உலகறியச் செய்யும் இந்தப் பிரஸ்தாபம் முடிந்த பிறகு, தன் அரண்மனையின் சிங்காரத் தோட்டத்திலுள்ள மண்டபத்தில் ஏழு நாள் விருந்து செய்வித்தான் (1:1-5). மருந்தும், விருந்தும் மூன்று நாள் என்பார்கள். ஆனால், இங்கோ ஏழுநாள். இப்படி இந்த விருந்து உச்ச கட்டத்தில் இருந்த போது தான். தனக்குக் கிடைத்த எக்கச்சக்க மரியாதையாலும், திராட்ச ரச மிகுதியினாலும் மனதிலும், சரீரத்திலும் தள்ளாடி, தான் என்ன செய்கிறோம் என்பது கூட சரியாகத் தெரியாமல், கணவனாகிய தனக்கு மாத்திரமே தாரை வார்த்துக்

கொடுக்கப்பட்டுள்ள மனைவியாகிய வஸ்தியின் அழகை, அங்கே மதிமயங்கின நிலையில் உள்ள பிரபுக்களும் கண்டுகளிக்கும்படியாக அழைத்து வர ஆணை பிறப்பித்தான். இந்தக் குடிகாரக் கூட்டத்தின் முன் வந்து நிற்க சங்கோஜப்பட்ட மகாராணி வஸ்தி, கட்டளையை மீறி, ராஜா மூர்க்க வெறி கொள்ளும்படி செய்தாள். (V.12)

அப்பொழுது ராஜாவின் கட்டளையை அவமதித்த வஸ்தியை என்ன செய்யலாமென்று ஒரு பெரிய ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இறுதியில், ராஜகீர்த்தியை அவமாக்கி தேசத்திலுள்ள அனைத்துப் பெண்களுக்கும் அவமானச் சின்னமாகிவிட்ட வஸ்தியின் ராஜமேன்மை பறிக்கப்பட்டு அவளைப் பார்க்கிலும் உத்தமியாயிருக்கும் வேறொருத்திக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது (1:13-19). பிறகு, புதிய ராணிக்கான வேலையும் துவங்கியது. இங்கே தான், பாபிலோனியரால் சிறைபிடிக்கப்பட்டு, அந்நாட்களில் அங்கேயிருந்த ஆயிரங்களிலான அடிமைகளில் ஒருவனாகிய மொர்தெகாய் தன் வேலையைத் துவக்கினான். ஆம், தேவ பயமும், குலப்பற்றும் கொண்ட மொர்தெகாய், தன் வளர்ப்பு மகளாகிய எஸ்தரைக் கொண்டு மிகச் சாதுரியமாகக் காய் நகர்த்தி, தேவ சித்தப்படி அவளை ராஜாத்தியுமாக்கி விட்டான்.

அடிமையாயிருந்து, அரண்மனைவாசியாகி விட்டாலும், தன்னை வளர்த்து ஆளாக்கி, அரசியுமாக்கிவிட்டு, இன்னும் அரண்மனை வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கும் மொர்தெகாயை மறக்கவோ, அவன் சொல்படி கேட்டு நடக்க மறுக்கவோ, மரியாதை செலுத்தத் தவறவோ இல்லை. தேவ இரக்கம் சும்மா ஒருவருக்குக் கிடைத்து விடுவதில்லையென்பதற்கு எஸ்தரின் சம்பவமும் ஒரு பலமான சாட்சி.

பிறகு சிலகாலம் கழித்து, ராஜாவாகிய அகாஸ்வேரு, முகவிலாசம் இல்லாத ஆகாகியனான ஆமானை மேன்மைப்படுத்தி, எல்லாப் பிரபுக்களுக்கும் மேலாக, அவன் ஸ்தானத்தை உயர்த்தி, எல்லாரும் அவனை வணங்க வேண்டுமென்று கட்டளையுமிட்டான். ஆனால், தேவ பக்தியில் தேறின மொர்தெகாய் **இவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை.** ஏன் அப்படி என்ற கேள்வி வந்த போது, **"நான் யூதன்"** என்று நெத்தியடியாகப் பதில் வந்தது. இப்படித் தன் அந்தஸ்துக்கு, ஓர் அடிமையால் சவால் விடப்படுவதைக் கண்டு பொறுக்க முடியாத ஆமான், **இவன் மேல் மாத்திரம் கை போடுவது இலேசான காரியம் என்று எண்ணி, யூத குலத்தை அடியோடு வேரறுக்கும் அதிரடி திட்டத்தில் இறங்கினான்** (3:1-6). ஆம், மிகச் சாமர்த்தியமாகச் செயல்பட்டு, ஒரு சதித்திட்டத்தை கனகச்சிதமாகத் தீட்டி, அதற்கான ராஜாவின் ஒப்புதலையும்

பெற்று, அஞ்சற்காரர் கையில் கொடுத்து, சாம்ராஜ்ய மெங்கும் பிரசித்தம் பண்ணினான் (3:8-15). அவன் கணக்குப்படி திட்டம் வெற்றி. இன்னும் சில நாட்களில் மொர்தெகாய் உட்பட அனைத்து யூதர்களும் அவுட்.

ஆனால் நடக்கும் யாவற்றையும் உன்னிப்பாகக் கவனித்த மொர்தெகாய், யூதருடைய துயர கால வழக்கப்படி, தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக் கொண்டு, மகா சத்தத்தோடு அலறிக் கொண்டு அரண்மனை முகப்பு மட்டும் வந்தான். இக்கோலத்தில், அதற்கு மேல் அவனுக்கு அனுமதி இல்லை. நடந்ததைக் கேள்விப்பட்ட எஸ்தர், மாற்றிக் கொள்ள வஸ்திரம் அனுப்பினாள். கொள்கைவாதியான அவன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. காரியம் என்னவென்று விசாரித்த போது, **"உடனடியாக அவள் செயல்படும் நேரம் வந்து விட்டது"** என்ற செய்தி பறந்தது (4:8). **சூழ்நிலையினடிப்படையில் அவள் சற்று தயங்கின போது,** மற்ற யூதர்கள் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே என்ற எச்சரிப்பு மணியையும் ஓங்கி அடித்தான் (4:12) வளர்ப்புத் தந்தையின் சொல்லுக்குத் தலை வணங்கிய எஸ்தர் வழக்கத்தையும் சட்டத்தையும் மீறி ராஜாவினிடம் சென்றாள். அங்கே, அவளுக்கு ராஜ அனுக்கிரகம் கிடைத்தது. இல்லையில்லை, தேவ அனுக்கிரகம் கிடைத்தது. இது தானே சரி !

அப்பொழுது, ராஜ்யத்தில் பாதி மட்டும் தரத் தயாராக இருந்த ராஜா, உன் மன்றாட்டு என்ன? என்றான் (5:3). நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? இது தான் சமயம் என்று அவசர கோலத்தில் எதையாவது கேட்டு, **சூப்பைக்** கெடுத்திருப்போம். ஆனால், நம் எஸ்தர் நிதானமாகச் செயல்படுகிறாள். தான் செய்யும் விருந்துக்கு, ராஜாவோடு, ஆமானும் வரவேண்டுமென்று அழைப்பு. அங்கே, ஏக தடபுடலாக விருந்து. சொக்கிப்போன ராஜா, "என்ன வேண்டும் ராஜாத்தியே" என்கிறான். அடக்கி வாசிப்பதில் கைதேர்ந்த இந்த அடிமை ராணி, அப்போதும் தன் நோக்கத்தை வெளிப்படுத்தவில்லை. தப்புதப்பு. வெளிப்படுத்த தேவன் அனுமதிக்க வில்லை. சரிதானே!. இங்கு தான் ஆமானுக்கான கண்ணி வைக்கப்படுகிறது. ஆம், புகழ்போதை தலைக்கேறினால் தானே, அவன் தலைகுப்புற விழமுடியும்! ஆக, மறுபடியும் விருந்துக்கான அழைப்பு. ராஜாவுக்குச் சமமாக உட்கார்ந்து, ராஜாத்தியால் பரிமாறப்பட்டு விருந்துண்டு வீடு திரும்பும் போது, **வழக்கமான அதிர்ச்சி காத்திருந்தது**. ஆம், தேவ மனிதன் மொர்தெகாய் இவனை துளியும் பொருட்படுத்தாமல் அமர்ந்திருந்தான். ஆத்திரத்தை அடக்க முடியாமல் துடிக்கிறான். அப்பொழுது, அவனை ஆசுவாசப்படுத்தும்படியாய் அவனுடைய மனைவி சிரேஷும், அவன் நண்பர்களும், 50 முழ உயரமுள்ள தூக்கு மரத்தை நட்டு, ராஜாவின்

அனுமதியோடு அவனைத் தூக்கிலிட்டு, அவன் காரியத்தை முடித்து விட்டு, பிறகு நிறைந்த மனதோடு அடுத்த விருந்துக்குப் போகலாம் என்று ஆலோசனை சொன்னார்கள். ஏதோ, இந்த **மொர்தெகாய்க்குச் செய்ய நினைப்பது எதுவும் தடைபடாது என்பது போல.** இந்த அறிவு ஜீவி ஆமானுக்கு இவர்கள் ஆலோசனை சரியாகப்பட்டதால், தூக்கு மரத்துக்கு உடனடியாக ஏற்பாடு செய்தான்.

இதற்கிடையில், ராஜா, மொர்தெகாய் எப்பவோ செய்த நன்மையினிமித்தம், அவனைக் கனப்படுத்த விரும்பி, ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான். இந்த மடையன் ஆமான், தனக்குத்தான் இந்தக் கனம் என நினைத்துக் கொண்டு, ஒரு பெரிய பட்டியலைக் கொடுத்தான். ராஜாவோ, அவையனைத்தையும் மொர்தெகாய்க்குச் செய்யும்படி கட்டளை கொடுத்தான் (6:17). மொர்தெகாய் ராஜ கனத்தோடு, **குதிரை மீதேறி நகர்வலம்.** அய்யா ஆமான் **முக்காட்டோடு வீட்டுக்குத் தீவிரம்** (6:11,12).

இந்த சமயம் பார்த்து அடுத்த விருந்துக்கான அழைப்பு. முகத்திலே இருந்த முக்காட்டை மாத்திரம் எடுத்துப் போட்டு, மனதிலே இருந்த முக்காட்டை விலக்க முடியாதவனாய் விருந்துக்குப் போனான். சமயத்தை சாதுரியமாகப் பயன்படுத்திக் கொண்ட புத்திசாலிப்பெண் எஸ்தர், என்ன வேண்டுமென்று ராஜா கேட்டவுடன், ஆமானின் முகத்துக்கு நேரே குற்றப்படுத்தி அவனை திகிலடைய வைத்தாள் (7:6). அப்பொழுது, உயிர்ப்பிச்சை கேட்டு எஸ்தரிடம் மன்றாடும் வேளையில், அவள் மெத்தையில் விழுந்து போனான். இதைக்கண்ட ராஜா தன் கண் முன்பாக ராஜாத்தியை பலவந்தம் செய்ய முயற்சிக்கிறானோ என்றவுடன் அவன் முகத்தை மூடிப்போட்டார்கள். பிறகு பிரதானிகளின் ஆலோசனைப்படி, மொர்தெகாய்க்காகத் தான் செய்த தூக்குமரத்திலே அவனைத் தூக்கிப் போட்டார்கள். அய்யா ஆமான் அந்தரத்தில் தொங்கினான்.

அருமையானவர்களே, ஆமான் தூக்குமரத்தை செய்யும்படி சொன்ன போது, அது தனக்கே கேடாக மாறும் என்று நினைத்திருக்க மாட்டான். மொர்தெகாய்க்காக அவன் செய்த தூக்கு மரத்தில் அவனே ஒரு கட்டத்தில் தொங்க வேண்டியதாயிற்று. என்ன காரணம்? அவன் ஆத்திரம், அவன் புத்தியீனம், மற்றவர்களின் தவறான ஆலோசனைக்கு உடன்பட்டது என்று பல காரணங்களை நாம் கூறமுடியும்.

ஐயோ, இந்த ஆமான் பாவம் என்று நினைக்கிற இவ்வேளையில், இந்த ஆமானோடு நம்முடைய நிலையை ஒப்பிட்டு பார்ப்போம். இந்த ஆமான், சரீர வாழ்வில் செய்த தவறுகள் அவனுக்கே ஆபத்தாக மாறி, தான் நாட்டின தூக்குமரத்தில் தானே தொங்க நேர்ந்தது போல, நாம்

ஆவிக்குரிய வாழ்வில் செய்யும் பல தவறுகள் பின்னாளில் நமக்கே ஆபத்தாக மாற வாய்ப்புண்டு. ஆகவே, ஆவிக்குரிய வாழ்வில் ஒவ்வொன்றையும் நாம் கவனமாகச் செய்வது அவசியம்.

இப்பொழுது, நாம் நாட்டுகிற எவையெல்லாம் பின்னாளில் நம்மைத் தொங்க வைக்கும் தூக்கு மரங்களாக மாறக்கூடும் என்று சிலவற்றை மாத்திரம் பார்ப்போம்.

## I. <u>திருமணத்தில் தேவ ஆலோசனையைப் புறக்கணித்தால் ...</u>

முதலாவது, தேவன் மீது முழுமையான விசுவாசமுள்ளவர்கள், தங்களுடைய மற்றும் தங்கள் குடும்பத்தார்களுடைய திருமண காரியங்களில், தேவன் கொடுத்திருக்கும் ஆலோசனைகளை அசட்டை செய்கிறவர்களாக இருந்தால், நம்முடைய குடும்ப வாழ்வுக்கான தூக்குமரத்தை நாமே நாட்டுகிறவர்களாகவே இருப்போம்.

உலகிலுள்ள மிகத் தொன்மையான அமைப்புகளுள் முதன்மை யானது குடும்பம். தேவனால் ஏற்படுத்தப்பட்டது (ஆதி 2:24). இப்படி குடும்பத்தை ஏற்படுத்த எண்ணங்கொண்டு, ஏவாளை ஆதாமுக்கு உண்டு பண்ண தேவன் விரும்பிய போது, அவள் **ஏற்றவளாக** இருக்க வேண்டுமென விரும்பினார் (ஆதி 2:18). அவள் அப்படி ஏற்றவளாக இல்லாத பட்சத்தில் அது ஆதாமுக்கும், அவன் குடும்ப வாழ்வுக்கும் சரியாக இருக்காது, மகிழ்ச்சியைத் தராது என்பதை நன்றாக அறிந்திருந்தார். ஆகவே தான், ஏற்ற துணையை ஏற்படுத்தினார்.

எந்தெந்த வகைகளில், அவள் ஏற்றவளாக இருந்தாள்? 1. சரீர அமைப்பில் ஏற்றவளாக இருந்தாள். 2. உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்றவளாக இருந்தாள். 3. மனதின் காரியங்களை பரிமாறிக் கொள்வதற்கு ஏற்றவளாக இருந்தாள். 4. ஆவிக்குரிய காரியங்களில் இணைந்து செயல்படுவதற்கு ஏற்றவளாயிருந்தாள். இப்படி ஒரு மனிதனுக்கு ஒருத்தி எல்லாவகையிலும் ஏற்றவளாயிருக்க வேண்டுமென்று தேவன் திட்டமிட்டிருக்கும் போது, நாம் திருமண காரியங்களில் "ஏற்ற" இந்த வார்த்தையை அந்நிய காரியமாக எண்ணுவது நியாயமாக இருக்குமா? அப்படியென்ன நாம் தேவனைக் காட்டிலும் ஞானிகளா? அல்லது எல்லாம் தான் தெரிந்தவர்களா?

இல்லையில்லை, "ஏற்ற" என்ற வார்த்தைக்கு நாங்களும் தான் முக்கியத்துவம் தருகிறோம் என்கிறீர்களா? ஒரு வகையில், அதுவும் நியாயம் தான். ஆனால், அது எந்த வகையில்? ஜாதியில், சமுதாய அந்தஸ்தில், அழகில், படிப்பில், பணத்தில், நகையில், நட்டில், நிறத்தில்,

குறியில் என்று இவைகளில் ஏற்றவளாக இருக்கிறாளா என்று பார்க்கிறோம். உண்மையா? இல்லையா? தங்களை பரம்பரை கிறிஸ்தவர்களென்று வெட்கமில்லாமல் கூறிக்கொண்டு, ஜாதிப்பித்துப் பிடித்து அலையும் எண்ணிலடங்காத பெற்றோர்கள் கிறிஸ்தவ சமுதாயத்தில் இருக்கிறார்களா இல்லையா? சொல்லுங்கள். கிறிஸ்து இந்த வேறுபாடுகளையெல்லாம் சிலுவையிலறைந்து சுமார் 2000 ஆண்டுகளாகியும், கிறிஸ்தவம் நம் தேசத்துக்கு வந்து 400 ஆண்டுகளாகியும், சத்தியவார்த்தைகள் சாட்சி பகறும் மெய்க்கிறிஸ்தவமும், கிறிஸ்துவின் சபையும் நம் மண்ணில் தழைத்து ஓங்கி 40 ஆண்டுகளாகியும் பணப்பித்தும், நகைப்பித்தும், ஜாதிப்பித்தும் கிறிஸ்த சமுதாயத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பது கொடுமையில்லையா?

கிறிஸ்தவ குடும்பங்களில் பகையும், விரோதமும், சண்டைகளும், வைராக்கியங்களும், வழக்குகளும், மனமுறிவோடு நிற்காமல் மண முறிவுகளும் ஏற்படுவது எதனால்? **குணசாலியான** ஸ்திரீயைத் தேடுவதற்குப் பதில் **பணசாலியான** ஸ்திரீயைத் தேடியதால் தானே ! பக்திக்குப் பத்தாமிடமும், உலக புத்திக்கு முதலிடமும் கொடுத்து ஆண்களைத் தேடுவதால் தானே ! பணசாலியான ஸ்திரீயும், தன் புத்தியைப் பெரிதாக நம்பும் ஆணும் எப்படி சந்தோஷமான குடும்பத்தை ஏற்படுத்த முடியும்?

ஆகையால், அருமையானவர்களே, நம்முடைய திருமண காரியங்களிலும், நம் பிள்ளைகளின் திருமண காரியங்களிலும் தேவ ஆலோசனையை ஏற்று நடக்க வேண்டும். இல்லையேல், நம்முடைய நிம்மதியான வாழ்வுக்கு, நாமே தூக்கு மரத்தை நாட்டுகிறவர்களாக இருப்போம்.

## II. *<u>பிள்ளை வளர்ப்பில் தேவ ஆலோசனையைப் புறக்கணித்தால் ...</u>*

இரண்டாவதாக, பிள்ளை வளர்ப்பில் நாம் தேவ ஆலோசனையைப் புறக்கணிக்கிறவர்களாக இருப்போமானால், நமக்கு நாமே தூக்குமரத்தை நாட்டுகிறவர்களாகவே இருப்போம்.

சங்கீதம் 27:4 ல் "பிள்ளைகள் **கர்த்தரால் வரும் சுதந்திரம்** என்றும் கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" என்றும் பார்க்கிறோம். சுதந்திரம் என்பது பிறரிடத்திலிருந்து பெறுவது. அப்படியானால், பிள்ளைகளை நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறோம். அவர்கள், நித்தியத்தன்மை உடையவர்களாக இருந்தாலும், தற்காலிகமாக சரீரத்தில் நமது பொறுப்பில் கொடுக்கப்படுகிறார்கள். பிள்ளைகளைக் கொடுக்கும் தேவன், அவர்களை வளர்ப்பதற்கான ஆலோசனைகளையும் சேர்த்தே நமக்குக் கொடுக்கிறார். அந்த ஆலோசனைகளை நாம் ஏற்று நடக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார் (உபா. 6:7,8).

பிள்ளை வளர்ப்புக்கு எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டிலுள்ள மனோவா என்ற தேவ மனிதனை நாம் கவனிப்பது நல்லது. பிள்ளையில்லாமலிருந்த அவனுக்குப் பிள்ளை கொடுக்கப்படும் என்ற செய்தி கிடைத்தவுடன், **இரண்டு முறை** பிறக்கப்போகும் பிள்ளைக்காகத் தான் செய்ய வேண்டுவது என்ன என்று கேட்டுள்ளான். (நியாயா 13:8,12). குறிப்பாக இரண்டாம் முறை, "... **நீர் சொன்ன காரியம் நிறைவேறும் போது, அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும்? அதை எப்படி நடத்த வேண்டும்?** என்று கேட்டுள்ளான்" (ப.12). பிள்ளையை வளர்ப்பதற்கும், நடத்துவதற்குமுண்டான வேறுபாட்டை அறிந்தவனாக மனோவா இருந்துள்ளான் என்பதை நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும்.

பெரும்பாலான பெற்றோர்களுக்கு இந்த வேறுபாடு இன்னும் தெரியாமலே இருக்கிறது. பாலூட்டி, சோறூட்டி, உடை கொடுத்து, உறை கொடுத்து, பிள்ளைகளை பிஞ்சுப்பருவத்தில் **வளர்க்கிற** விஷயத்தில் அநேகர் வெற்றி பெறுகிறார்கள். ஆனால், அவர்களை **நடத்துகிற** காரியத்தில், பெருந்தோல்வியையே சந்திக்கிறார்கள். **பிள்ளையானவனை நடத்துவதற்கென்று ஒரு வழி இருக்கிறதென்று, பிள்ளைகளைக் கொடுக்கும் தேவன் ஞானியைக் கொண்டு சொல்லியுள்ளார்** (நீதி 22:6) ஆனால், அந்த வழியை விட்டு விட்டு, ஏதோ தங்களை, தேவனைக் காட்டிலும் ஞானிகளென்று நினைத்துக் கொண்டு, தங்கள் இஷ்டம் போலும், பிள்ளையின் விருப்பம் போலும் நடத்தி விட்டு பிறகு கண்ணீர் விடுகிறார்கள்.

அன்பானவர்களே, பிள்ளையை நடத்த வேண்டிய வழியிலே நடத்தாவிட்டால் என்ன ஆகும் என்பதையும் தேவன் கூறியுள்ளார். "... **தன் இஷ்டத்துக்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான்"** (நீதி 29:15). "ஞானமுள்ள மகன் தன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான். மூடத்தனமுள்ளவனோ, தாய்க்கு **சஞ்சலமா யிருக்கிறான்"** என்று (நீதி 10:1). பெற்றோருக்கு வெட்கத்தையும், சஞ்சலத்தையும் உண்டு பண்ணும் பிள்ளைகள், ஏசாவைப் போல, பெற்றோர்களுக்கு மனநோவாகத்தானே பின்னாளில் இருப்பார்கள். அப்படித்தானே !

ஆகையால், பிள்ளைகளுக்கான தேவ ஆலோசனையை ஏற்று நடப்போம். மறுப்போமானால், நம்முடைய அந்திய கால சமாதானத்திற்கு, நாமே தூக்குமரத்தை நாட்டுகிறவர்களாக இருப்போம். வேண்டாம் தூக்குமரம்.

### III. <u>*ஆத்தும இரட்சிப்பில் தேவனுடைய திட்டத்தைப் புறக்கணித்தால் ...*</u>

மூன்றாவதாக, ஒரு மனிதனின் ஆத்தும மீட்பிற்காக தேவன் வகுத்துத் தந்திருக்கும், இரட்சிப்பின் திட்டத்தை நிராகரிக்கிறவர்களா யிருப்போமானால் நமக்கு நாமே தூக்கு மரத்தை நாட்டுகிறவர்களாகவே இருப்போம்.

தன்னால் படைக்கப்பட்ட **ஒவ்வொருவரும் பாவத்திலிருந்து இரட்சிப்படைய வேண்டுமென்பது தேவனின் விருப்பம்** (I தீமோ 2:4) இரட்சிப்பை விரும்பும் தேவன் அதற்கான வழியையும் நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளார். ஆம், முதலாவது தம்முடைய ஒரே பேரான குமாரனை நமக்காக பூமிக்கு அனுப்பிக் கொடுத்தார் (யோவா 3:16). அடுத்து, அந்த குமாரனைக் கொண்டு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் (எபி 2:3) அத்தோடு நிற்காமல், அந்தக் குமாரனையே நமக்காக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். இதற்கு மேலும் ஒரு படி, சென்று பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு, வேதவசனங்களின் மூலம், இரட்சிப்புக்குத் தேவையான முழுத் திட்டத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

நமக்காக இவ்வளவு செய்துள்ள தேவன், நாம் அந்த இரட்சிப்பின் திட்டத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதில் நியாயம் இருக்கிறதா இல்லையா? பவுலடியாரைக் கொண்டு கொடுக்கப்பட்ட அத்தேனே பட்டணத்து மார்ஸ்மேடைப் பிரசங்கத்தில், **மனந்திரும்புங்கள் என்று கட்டளை கொடுக்கிறார்** (அப் 17:30). மனிதனின் இரட்சிப்பு, தேவனுடைய விருப்பமும், எதிர்பார்ப்பும் மாத்திரமல்ல. அது அவருடைய கட்டளையாகவும் உள்ளதென்பதை நாம் கவனிக்க வேண்டும். அப்படியானால் தேவ கட்டளையை நாம் மீறலாமா? அப்படி மீறினால், தப்பிக்க முடியுமா? எபிரெயே ஆசிரியர், “ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே” (10:31) என்றல்லவா நம்மை எச்சரிக்கிறார். அப்படியனால் நாம் செய்ய வேண்டுவது என்ன? உடனடியாக நம்மை, இரட்சிப்பின் திட்டத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். இதோ அந்த இரட்சிப்பிற்கான படிகள் 1. கேள்விப்பட வேண்டும் (ரோம. 10:17) 2. விசுவாசிக்க வேண்டும் (அப் 10:43, யோவா 20:30,31) 3. மனந்திரும்ப வேண்டும் (அப். 2:38, 17:30) 4. அறிக்கையிட வேண்டும் (அப் 8:37, ரோம 10:9,10) 5. பாவ மன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும். (மாற். 16:16, மத் 28:19). இந்தப்படிகளை பின்பற்றி நீங்கள் இரட்சிப்படைந்து விட்டீர்களா?

அன்பானவர்களே, தேவன் இவ்விதம் தந்துள்ள இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால், தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்ளுவோம்? என்று எபிரேய ஆசிரியர் கேட்கிறார் (எபி 2:4). தண்டனை நியாயத்தீர்ப்பின் போது உறுதியாகும் (எபி 9:27). நம்முடைய நித்திய வாழ்வு சூன்யமாகும்.

ஆகையால், தேவன் நமக்குத் தந்திருக்கும் இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளுவோம். ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், நம்முடைய நித்திய வாழ்வுக்கான தூக்குமரத்தை நாமே நாட்டுகிறவர்களாக இருப்போம். வேண்டாம், வேண்டவே வேண்டாம் தூக்குமரம்.

**S. Rajanayagam**

# ஜெபத்தின் மீது நாம் ஏன் நம்பிக்கை வைக்கிறோம்

**ஜெ**பம் என்பது வேதாகமம் நம்மிடம் எதிர்பார்க்கும் ஒரு செயலாகும். தேவனிடத்தில் பேசி, சொல்லி, நமது விண்ணப்பங்களை தெரியப்படுத்துவதாகும். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார், "நீங்கள் ஒன்றுங்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி. 4:6) என்கிறார்.

தேவனோடு, நமக்கு இருக்கும் உறவை கவனித்தால், அவர் நமக்கு தந்தையாகவும், கிறிஸ்தவர்கள் அவரின் புத்திரர்களாகவுமிருக்கிறோம். தேவனுக்கு எதுவும் தேவையில்லை. அவர் நித்தியமானவர், சர்வவல்லமையுள்ளவர், அவரிடமிருந்து தான் சகல ஆசீர்வாதங்களும் வருகிறது. யாக்கோபு சொல்லுகிறார், "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது ; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக் 1:17) என்று பிள்ளைகளாயிருக்கிற நமக்குத் தான் தேவன் தேவையாயிருக்கிறார். அவரே நமக்கு தகப்பனாயிருக்கிறார், நம்முடைய தேவை அனைத்திற்கும், சோதனையை மேற்கொள்ளவும், நாம் பாவம் செய்யும் போது மன்னிப்பை பெறவும் நாம் தேவனிடத்திற்குப் போக வேண்டும்.

ஜெபம் பற்றி, கர்த்தரிடத்திலே விண்ணப்பம் செய்வது பற்றி, நமது ஜெபத்தை அவர் கேட்டு அதற்கு பதிலளிப்பது பற்றி நாம் சில வேத வசனங்கள் தியானிப்போம். கிறிஸ்து தனது சீஷர்களிடம் கூறும் போது, **"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதை செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்"** (யோவான் 14:13,14) என்கிறார். மீண்டுமாக, அவர் சொல்லுகையில், நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும், நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால், என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள் (யோவான் 15,7,8) என்கிறார். பின்பு அவர் சொல்லுகையில், "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன் ; **நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை**

**அவர் உங்களுக்கு கொடுக்கத் தக்கதாக** நீங்கள் போய் கனி கொடுக்கும் படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்கிறார் (யோவான் 15:16)

மலைப்பிரசங்கத்தில் நமதாண்டவர், "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் ; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் ; அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், **கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்**; தேடுகிறவன் கண்டடைகிறான் ; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" என்கிறார் (மத் 7:7,8)

அப்போஸ்தலனாகிய யோவான் இவ்வார்த்தைகளை எழுதுகிறார், **"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்"**. நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம் (I யோ 5:14,15) என்கிறார்.

மேற்கண்ட வசனங்களை நாம் மேலோட்டமாக காண்கையில், கர்த்தர் நமது எல்லா ஜெபங்களுக்கு பலன் அளிப்பார். நாம் செய்யும் விண்ணப்பத்தை நிறைவேற்ற அவர் முன் நிபந்தனைகள் எதையாகிலும் வைக்க மாட்டார் என்பது போலத் தெரிகிறது. ஆனால் அவ்வசனங்களை அருகில் சென்று பார்க்கையில், ஜெபம் செய்வதில் அநேக காரியங்கள் அடங்கியிருப்பதையும், தேவன் பதில் கொடுக்கிற அல்லது செவி கொடுக்கிற ஜெபம் பற்றியும் நாம் ஆழமாக பார்க்கலாம்.

முதலாவது, ஒருவனுடைய ஜெபம் கேட்கப்பட வேண்டுமானால், அதாவது, அவன் தேவனுடைய பிள்ளையாக, ஒரு கிறிஸ்தவனாயிருக்க வேண்டும். யோவான் 9:31 ல் நாம் வாசிக்கிறோம், பாவிகளின் ஜெபத்தை கேட்பதுயில்லை என்று. ஏன், தேவன் ஒரு பாவியின் ஜெபத்தை கேட்கக்கூடாது? அவனிடத்திலிருக்கும் பாவத்தினால், ஜெபிக்கும் ஒரு மனிதனுக்கும் தேவனுக்கும் நடுவே அது தடுப்புச்சுவரை எழுப்புகிறது.

ஏசாயா தீர்க்கன் சொல்லும்போது, "இதோ இரட்சிக்கக் கூடாத படிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை". உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்கு செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது என்கிறார் (ஏசாயா 59:12) ஒரு பாவி, தேவனுடைய பிள்ளையாக இல்லாத போது, அவனுடைய பிதாவாக தேவன் இல்லாத போது, தேவன் அவர்களுடைய ஜெபத்தை எப்படிக் கேட்பார்?

ஒரு பாவி தேவனிடத்தில் ஜெபித்துவிட்டு அவர் என் ஜெபத்தை கேட்பார் என்று எதிர்பார்த்தால், கிறிஸ்தவனல்லாதவனைவிட, கிறிஸ்தவனாயிருக்கிறவன் என்ன மேன்மை கொண்டிருக்கிறான்?. சிலர் நினைப்பதற்கு மாறாக, ஜெபத்தை கேட்டு, அதற்கு பலன் அளிக்க வேண்டுமென்பது போன்ற விஷயங்களில் கிறிஸ்தவனுக்கும், கிறிஸ்தவனல்லாதவனுக்கும் அநேக வேறுபாடுகள் உண்டு.

இரண்டாவதாக, தேவன் அவருக்கு பிள்ளையாயிருக்கும் ஒருவனுடைய ஜெபத்தை கேட்க வேண்டுமானால், அவன் நீதியுள்ளவனாக, தேவனுக்கு உண்மையுள்ளவனாகயிருக்க வேண்டும். பேதுரு தன் நூலில், **"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது**, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (I பேதுரு 3:12) என்கிறார். ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்து, வழி விலகி போவானானால் அவன் மனந்திரும்பி, தன் தவறுகளை அறிக்கையிட்டு, தன் பாவங்கள் மன்னிக்கப்பட தேவனிடத்தில் வேண்டுதல் செய்ய வேண்டும். யாக்கோபு சொல்லுகையில், "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். **நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது**". (யாக் 5:16) என்கிறார்.

மாயவித்தைக்காரனாகிய சீமோன், கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, தேவனுடைய பிள்ளையாக மாறின பின்பு, பேதுருவும், யோவானும், சமாரியாவிலுள்ள சில கிறிஸ்தவர்கள் மீது தங்கள் கைகளை வைத்த போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு கொடுக்கப்பட்டார். இதைக் கண்ட சீமோன் அதை பணம் கொடுத்து வாங்க முயற்சித்தான். அதன் பின்பு, "பேதுரு அவனை நோக்கி, தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது. **உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையிராதபடியால், இந்த விஷயத்தில் உனக்குப்** பங்குமில்லை, பாகமுமில்லை. ஆகையால், நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள் ; ஒரு வேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன் : நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்" (அப். 8:20-24) சீமோன் மனந்திரும்பி, மன்னிப்பை கோரமாலிருந்து விட்டு, தொடர்ந்து தேவனை நோக்கி ஜெபித்துக் கொண்டு, தான் கேட்கப்பட வேண்டுமென்று நினைக்க முடியுமா? நிச்சயமாக முடியாது.

மூன்றாவதாக, எந்த வசனம் சீஷர்கள் ஜெபிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதாக நீங்கள் காண்கிறீர்களோ, அந்த வசனத்தில் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால், அப்படி கொடுக்கப் பட்டிருக்கும் வாக்குத்தத்தத்திற்கு முன்போ அல்லது பின்போ ஒரு நிபந்தனையொன்று அவ்வசனத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். உதாரணமாக, யோவான் 14:14 ல் இயேசு சொன்னார், "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்றார். ஆனால், அடுத்த வசனத்திலேயே, **"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்"** என்கிறார். ஆகவே அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளாவிட்டால், நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருந்தாலும் நமது விண்ணப்பத்தைக் கேட்பார் என்று உங்களால் எண்ணிப் பார்க்க முடிகிறதா?

யோவான் 15:7 ல் அவர் சொல்லும் போது, "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்கிறார். இதிலும், **"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்"** என்பது தான் திறவுகோல் வார்த்தை. ஒருவன் கர்த்தரிலும், அவருடைய வார்த்தை அவனிலும் நிலைத்திருந்தால் அவன் எப்படிப்பட்டவனாக யிருப்பான்?. நிச்சயமாகவே, உண்மையுள்ள, விசுவாசமுள்ள கிறிஸ்தவ னாகயிருப்பான். ஒருவன் கிறிஸ்துவிலும், அவருடைய வார்த்தைகள் இவனிலும் இல்லாவிட்டால், அவனுடைய வேண்டுதலுக்கு தேவன் பதிலைத் தருவாரா? நிச்சயமாகவே இல்லை.

யோவான் 15:16 ல் கிறிஸ்து சொன்னார். **"...நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக ..."** என்கிறார். ஆனால் இவ்வசனத்தில் மற்ற பகுதிகளைப் பார்த்தால், தேவன் அவர்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார். அவர்கள் கனி கொடுக்கும்படியாக என்று கவனிக்கிறோம். இங்கே இயேசுவானவர் தனது அப்போஸ்தலர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார் என்பது உண்மையாயிருந்தாலும், அவர்கள் கனி கொடாமலிருந்தால், தேவன் செவி கொடுத்திருப்பாரா? இல்லை. மீண்டுமாக, கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான் என்று கிறிஸ்து வாக்கு கொடுக்கிறார் (மத்தேயு 7:7,8). ஆனால் தொடர்ந்து அவர் சொல்லுகையில், **"உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?** ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது,

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத்தேயு 7:9-11) என்கிறார். தேவன் தனக்கு உண்மையுள்ளவர்களுக்கு பதில் அளிக்கிறார். கீழ்ப்படியாதவர்களுக்கும், எதிர் பேசுகிறவர்களுக்கும் அவர் எப்படி பலன் தருவார், ஆசீர்வாதம் கட்டளையிடுவார்?

இறுதியாக I யோவான் 5:14,15 யோவான், மிகத் தெளிவாக, தேவனுடைய சித்தத்தின்படி நாம் கேட்டால் தான் அவர் நமக்கு செவி கொடுப்பார் என்று கூறுகிறார். தன் பிள்ளைகளை நேசிக்கிற ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு தீமை உண்டாக்குகிற ஒன்றை கொடுக்கமாட்டார். ஆனால் வேறு வழியில்லை என்றால் தன் பிள்ளைகளும் அவைகளை கேட்டுக்கொண்டேயிருந்தால் அவர்கள் கொடுத்து விடுவார்கள். அது போலவே நமது பரலோக தகப்பனும் செயல்படுகிறார். நாம் ஒன்றை அவரிடம் கேட்கலாம். ஆனால் அவரோ சர்வ ஞானியாயிருந்து அதை நமக்கு கொடுக்க வேண்டாம் என்று எண்ணலாம். ஆனால் நாம் அதை கேட்டுக்கொண்டே இருந்தால் வேறு வழியின்றி, அவரும் கொடுத்து விடுவார். ஆனாலும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பது நிச்சயம் (ரோமர் 8:28).

கிறிஸ்தவர்களாகிய நாம் எப்பொழுதும் வேண்டிக்கொள்ளக்கூடிய தகப்பனுடையவர்களாக இருப்பதால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். கிறிஸ்து சொன்னார் நாம் சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ண வேண்டுமென்று (லூக் 18:1) இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டுமென்று அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார் (I தெசலோ 5:17) முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், ஜெபத்திலும் உறுதியாக தரித்திருந்தார்கள் என்று வசனம் சொல்கிறது (அப்போஸ் 2:42). நாம் துன்பப்பட்டால் ஜெபம் பண்ண வேண்டுமென்று யாக்கோபு கூறுகிறார் (5:13) நீதிமானுடைய ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்று யாக்கோபு கூறுகிறார் (5:16) ஒரு அற்புதம் செய்து நான் ஒரு வியாதியஸ்தனை சுகப்படுத்துவேன் என்று தேவன் நமக்கு வாக்களிக்கவில்லை என்ற போதிலும், ஜெபம் நிச்சயம் மாறுதலைக் கொண்டுவரும். நாம் மருத்துவர், மருந்து, இயற்கையின் சட்டம் இவைகளின் மூலம் தேவன் கிரியை செய்ய ஜெபிக்கலாம். தேவன் பதில் அளிக்கும் விதம் பற்றி நாம் சில வேளைகளில் குறைத்து மதிப்பீடு செய்கிறோம், அற்புதத்தால் மாத்திரமே அவர் தனது வல்லமையை வெளிப்படுத்த முடியும் என்று நினைக்கிறோம். ஆனால் அப்படி அல்ல சகோதரர்களே. நமது விசுவாசம் எங்கே ? பிணியாளி களுக்கு வைத்தியன்

தேவை என்று இயேசு சொல்லியிருகிறார், நாம் தேவனை சோதிக்கலாகாது (மத்தேயு 9:12; 4:7)

தேவன் நமது ஜெபத்தை கேட்க வேண்டுமானால், நமது மத்தியஸ்தரும், நமது பிரதான ஆசாரியரும், நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவருமாயிருக்கிற இயேசுவின் மூலமே ஜெபிக்க வேண்டும். (1 யோவான் 2:1; 1 தீமோத் 2:5; எபிரே. 3:1)

நீங்கள் ஜெபத்தை நம்புகிறீர்களா? தேவன் உங்கள் ஜெபத்தை கேட்பார் என்று உறுதியாக உங்களால் ஜெபிக்க முடிகிறதா? நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லையென்றால், அந்த உறுதி உங்களுக்கு இராது. நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால் நீங்களும் கிறிஸ்தவராகலாம் (எபி 11:6; யோவான் 14:1; மத் 10:32; அப். 2:38) நீங்கள் இதைச் செய்தால் கர்த்தர் உங்களை தமது சபையில் சேர்ப்பார் (அப் 2:47) அப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாறியிருக்கிறீர்கள். தேவனுக்கு கடைசிவரை நீங்கள் உண்மையாக இருந்தால் அவர் உங்களது ஜெபத்தை கேட்பார். தொடர்ந்து கேட்பார்.

**J.C. சோட்** **J.C. CHOATE**


*திட்டமிடுங்கள் !* *பங்கு பெறுங்கள் !!*

**எட்டாவது வேதாகமக் கருத்தரங்கம்**

**கா**ங்கயம் கிறிஸ்துவின் சபையார் மற்றும் எக்லீசியா வேதாகமக் கல்லூரி இணைந்து நடத்தும் எட்டாவது வேதாகமக் கருத்தரங்கில் சபையாராக கலந்து கொள்ள இப்போதிருந்தே ஜெபிக்க வேண்டுகிறோம்.

**நாள் : அக்டோபர் 11, 12 செவ்வாய், புதன்**
**(அரசு விடுமுறை நாட்கள்)**
**இடம் : காங்கயம் கிறிஸ்துவின் சபை வளாகம்**

தொடர்பு முகவரி :

**கிறிஸ்துவின் சபை,** 288, தாரை ரோடு, காங்கயம்.

✆ 04257-230030, 230603 செல் : 98427-30382, 98428-30382

பெண்கள் பகுதி

# "மனைவி"

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, தாய்மார்களே, கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இம்மாதம் வேத வசன ஆதாரங்களுடன் "மனைவி" என்ற தலைப்பின் கீழ் பெண்களுக்கு வேதம் வகுத்திருக்கும் திட்டங்களைப் பார்ப்போம். பிதாவாகிய தேவனுடைய அனந்த ஞானத்தின் வெளிப்பாடுகளில் குடும்பம், தேசம், சபை ஆகிய இம்மூன்றும் அடங்கும். **"குடும்பம்"** என்பது முதல் தெய்வீகத் திட்டமாகும். பாவம், மரணம், வியாதி இவைகள் உலகத்தில் நுழைந்தபோது மனித குலத்துக்கு பாதுகாப்பாக இருந்த ஸ்தாபனம் குடும்பம். அழகான ஏதேன் தோட்டத்தை சிருஷ்டித்த விதம், நம் தேவனுடைய அன்பு மனிதன் மீது எப்படியிருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது. மனித குலத்தின் முதல் குடும்பமாக விளங்குவதற்கு தேவன் ஏதேன் தோட்டத்தை தெரிந்து கொண்டார். **தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். (ஆதி 2:7) சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான். ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படாமல் இருந்தது (ஆதி 2:20). தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் (ஆதி 2:18)** என்று சொன்னதிலிருந்து திருமணத்துக்கு தேவன் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பது நன்கு விளங்குகிறது. ஏவாள் ஆதாமுக்கு ஏற்ற துணையாக இருப்பதற்காக சிருஷ்டிக்கப்பட்டாள். திருமணத்திற்கான நோக்கம் மூன்று. **முதலாவது பலுகிப் பெருகி பூமியை நிரப்புவது** (ஆதி 1:28). இரண்டாவது, வேசித்தனம் இராமல் செய்வது (I கொரி 7:2). மூன்றாவதாக, துணையாக இருப்பது (ஆதி 2:18). கணவன், மனைவி இருவரையும் தேவன் ஒன்றாக இணைக்கிறார் (ஆதி 2:22, மத்தேயு 9:16). இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதி 2:24). குடும்பம் என்பதற்கு வேதாகமத்தின் விளக்கங்களை, வசன ஆதாரங்களோடு பார்த்தோம். குடும்பத்திற்கு முக்கிய பாத்திரங்களான கணவன், மனைவி இருவரில் **மனைவியின் பங்கு** என்ன என்பதை இப்பொழுது பார்ப்போம்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நாட்களில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய காரியங்களில் இதைத் தவிர முக்கியமானது வேறொன்றும் இல்லை. முன்னேற்றம் என்ற போர்வையில், இன்று மனைவிமார்கள் தங்கள் பங்கை சரிவர செய்யாததால் குடும்பம், சபை, சமுதாயம் இவைகள் உடைந்து காணப்படுகிறது. மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது?

## 1. மனைவி கீழ்ப்படிதலுள்ளவளாய் இருக்க வேண்டும் :

**சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபே 5:24).** ஏனென்றால், சபைக்கு நன்மை பயக்காத எந்தக் காரியத்தையும் கிறிஸ்து செய்யவில்லை. ஆகையால், கணவன் தன் மனைவிக்கு நன்மையேயல்லாமல் வேறெந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. இப்படி இருப்பதால் மனைவி எக்காரணத்தைக் கொண்டும் கணவனுக்கு விரோதமாக செயல்படக்கூடாது. இதை அடிப்படையாக வைத்து தேவன் இங்கே என்ன எதிர்பார்க்கிறார் என்றால், மனைவி தன் கணவனுக்கு **எல்லாக்காரியத்திலேயும்** கீழ்ப்படிந்திருக்க வேண்டும். தனக்கு ஒத்துப்போகிற காரியங்களில் மட்டுமல்ல. எபே 5:33ல் கூறப்படும் **பயபக்தி** என்ற வார்த்தையின் **பயம்** என்பது தோற்றத்தைப் பார்த்து பயப்படுவதல்ல. மாறாக தன் கணவனுடன் மகிழ்ச்சியாக இல்லாத சூழ்நிலையிலும் கணவன் மீது மனைவிக்கு பயம் இருக்க வேண்டும். தன் கணவன் **என்னவாக** இருக்கிறார் என்பதற்காக அவரை மதிக்காமல், தேவன் கணவனை குடும்பத்தில் **எந்த இடத்தில்** வைத்திருக்கிறார் என்பதை வைத்து மதிப்புக் கொடுக்க வேண்டும். (மனைவிக்கு தலைவர் கணவர்) தேவனின் இந்தக் கட்டளையை கணவன் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும், மனைவி தனக்கு தலை கணவன் என்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கக்கூடாது. **"அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந் திருந்தாள்"** (I பேதுரு 3:56).

## 2. மனைவி என்பவள் நன்மையானவள் :

உலகம் சொல்லுகிறபடி அல்லாமல் திருமணத்தை கனம் பொருந்திய ஒன்றாக வேதம் சொல்லுகிறது. "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ள தாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக. வேசிக் கள்ளரையும், விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் (எபி 13:4). மனைவி உண்டாக்கப்படாததற்கு முன்பு ஆதாம் முழுமையடையாத வனாய் இருந்தான். ஏவாள் ஆதாமை முழுமையடையச் செய்தாள் (ஆதி 2:18-25). நல்ல மனைவி தேவன் கொடுத்த ஈவு (ஆதி 2:18)

புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு (நீதி 19:14). குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள். இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள் (நீதி 12:4).

**3. மனைவியானவள் கற்றுக் கொள்ள வேண்டியவள் :**

தீத்து 2 ம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் குணாதிசயங்களை பிறப்பிலே பெற்றிராவிட்டாலும், ஒரு பெண் அவைகளை கற்றுக் கொள்ள முடியும். வயதிலே குறைவான ஸ்திரீகளுக்கு மூத்த பெண்மக்கள் இவைகளை கற்றுக்கொடுக்காவிட்டால் அது அவர்களுக்கு பாவம். பாலிய ஸ்திரீகள் இன்றைக்கு வீட்டை விட்டு வெளியே சென்று நிறைவை பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். அவர்களுக்கு வேதம் என்ன சொல்கிறது?

வேத வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு அவர்கள்

1. தங்கள் புருஷரிடத்தில் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும் (எபே. 5:25)
2. பிள்ளைகளில் அன்பு கூர வேண்டும்.
3. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
4. கற்புடன் இருக்க வேண்டும்.
5. வீட்டில் தரித்திருக்க வேண்டும்.
6. நல்லவர்களாய் இருக்க வேண்டும்.
7. தங்கள் புருஷருக்கு கீழ்ப்படிய வேண்டும் (தீத்து 2:4-5)

**4. மனைவிகள் தங்கள் பிள்ளைகளில் அன்பு கூர வேண்டும் :**

குடும்பத்தில் பிள்ளைகளை ஒரு பாரமாக நினைத்து விடக்கூடாது. பிள்ளைகள் கர்த்தரால் கிடைக்கும் சுதந்திரம். சங் 127:4. இதை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ளுமளவுக்கு அவர்களை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறாளோ அதுதான் அவள் தன் பிள்ளைகளின் மேல் வைக்கும் பாசத்திற்கு அளவுகோல். பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கடைசி வரை செயல்பட வேண்டும். பாதியில் நிறுத்திக் கொள்பவள் சிறந்த தாயுமல்ல, மனைவியுமல்ல.

(தொடரும்)

- **ரேச்சல் ராஜநாயகம்**

வாலிபர் பகுதி

# அனனியாவின் தைரியம் !

ஏதேன் தோட்டத்தில் இழந்து போன தேவ உறவை, மனுக்குலத்திற்கு மீட்டுத் தரவேண்டுமென்ற உன்னத நோக்குடன், தேவனோடிருக்கும் சிலாக்கியத்தையும், தேவதூதர்கள் வசிக்கும் பரலோக பாக்கியத்தையும் துறந்து, சேரியிலிருப்போரின் வாழ்வும் செழித்தோங்க மேரியின் மைந்தனாய் பிறந்து, தேவ கிருபையிலும் மனுஷ தயவிலும் வளர்ந்து சிறந்து இவ்வுலகில் சற்றொப்ப தனது முப்பதாவது வயதில் இறைபணியைத் தொடங்கி நன்மை செய்து சுற்றித் திரிந்து, மண்ணுக்கு விண்ணைத் துறந்து, தேவ சமூகத்திலிருந்து கிருபையும், அதினால் பாவ மன்னிப்பும் சுரந்து வர தைரியமாக மரணத்தை சந்தித்து, மரித்து வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த மகா தேவனாம் இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையில்லா நாமத்தில் உள்ளம் திறந்து உவகையுடன் வாலிபர்களாகிய உங்களை வாழ்த்துகிறேன்.

ஆதித் திருச்சபையின் சீர்மிகு வரலாற்றைத் தன் பக்கங்களில் தாங்கி நிற்கும் நூலாகிய அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தின் முதல் 10 அதிகாரத்திற்குள் இரண்டு அனனியாக்களை நாம் கவனிக்கிறோம். இருவருக்குமே தைரியம் என்ற குணமிருந்தது. ஆனால் முதலாமவன், தன் தைரியத்தை சர்வத்தையும் அறிந்த சிருஷ்டி கர்த்தரிடமே காட்ட சிந்தை கொண்டு, தான் விற்ற நிலக் கிரயத்தின் ஒரு பகுதியை வஞ்சித்து வைத்தது பரமனுக்கு தெரியாது என்ற பாமர எண்ணம் கொண்டது தான் என்ன விந்தை! தைரியமாய் அவன் பேதுருவினிடத்தில் வந்து மெய்யை மறைத்து பொய்யைச் சொன்னான், மெய்யில் உயிரற்ற பிணமாக மாறினான். ஆனால் நாம் இந்த அனனியாவைப் பற்றி பார்க்காமல், தமஸ்குவில் வசித்து வந்த சீஷனாகிய அனனியாவைப் பற்றி, அவன் எப்படி தன் தைரியத்தை வெளிக்காட்டினான் என்பது பற்றி பார்ப்போம், வாருங்கள் வாலிபரே ! அந்த அனனியாவை சந்திப்போம் !

## ஆயத்தமாயிருந்தான் ...

ஆதித் திருச்சபையை பாழாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதன் அங்கத்தினர்களின் அங்கங்களை துன்புறுத்திக் கொண்டு வந்த சவுல், தமஸ்குவில் சாலையில் சிலுவை நாதரை தரிசித்த பின் தலைகீழாக மாறி, தமஸ்குவில் மூன்று நாள் உண்ணாநோம்பு இருந்தான் ! அந்த வேளையில் தான் கர்த்தர் அனனியாவுக்கு தரிசனமாகிறார், அனனியாவே என்கிறார். அதற்கு நமது அனனியா **"ஆண்டவரே இதோ அடியேன்"** என்றான். ஏதோ

ஆண்டவருக்காகவே காத்திருந்தது போல, ஒரு வேலைக்காரன் தன் எஜமானின் குரலுக்கு பதில் சொல்லுவது போல **இதோ அடியேன்** என்கிறான்.

**"ஆண்டவரே இதோ அடியேன்"** என்கிற இவ்வார்த்தைகளை வாசிக்கும் போது அடியேனுடைய மனதிற்கு சாமுவேலின் ஞாபகம் தான் நீர் மேல் எழுந்த குமுழி போல் எழுந்து நிற்கிறது. அந்த பிள்ளை யாண்டானிடம் ஆண்டவர் "சாமுவேலே ! சாமுவேலே !" என்ற போது, அவன் "**சொல்லும் அடியேன் கேட்கிறேன்**" என்றான். (I சாமு 3:10) எனக்கு அன்பானவர்களே நாமும் கூட இந்த இளம்வயதில் தேவன் தனது சுவிசேஷத்தினால் நம்மை அழைக்கும் போது, **"சொல்லும் அடியேன் கேட்கிறேன்" எனச் சொல்வது போல நமது கீழ்ப்படிதலைக் காட்ட வேண்டும்**. அப்படி நாம் ஆண்டவருக்கு கீழ்ப்படிந்தவர்களாயிருந்தால் பவுலைப் போல, நாமும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கக் கடனாளியாக இருக்கிறோம் என்று உணர வேண்டும் (ரோமர் 1:15)

## நேர்த்தெருவுக்குப் போயிருப்பானா?

"ஆண்டவரே, இதோ அடியேன்" என்று சொன்ன அனனியாவிடம் கர்த்தர் " ...நீ எழுந்து நேர்த்தெரு எனப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான். அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன் மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார்" (அப் 9:11,12) எனக்கன்பானவர்களே ! யார் இந்த சவுல், கடும் பசியாயிருக்கும் சிங்கம் தன் இரையின் மீது சீறிப்பாய்ந்து தாக்குவது போல், இவன் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பாய்ந்திருக்கிறான் என்று இதே அதிகாரம் ஒன்றாம் வசனம் விளம்புகிறது.

அது மாத்திரமா! தேவ தூதனைப் போல வதனம் பிரகாசித்த ஸ்தேவானை கொலை செய்ய சவுலும் சம்மதித்திருந்தான் (அப். 6:15; 8:2) ஒரு கொலைக்கு உடந்தையாயிருந்தவன் அதுவும், ஸ்தேவான் கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசத்திற்காகவே கொலை செய்யப் பட்டான் என்கிற போது, சவுல் பழைய பிரமாணத்தில் எவ்வளவு வைராக்கியமாயிருந்திருக்கிறான் பாருங்கள். இவன் தமஸ்குவுக்கு வந்ததே கிறிஸ்தவ மார்க்கத்தராகிய புருஷர்களையும், ஸ்திரீகளையும் கண்டு, அவர்களை கட்டி எருசலேமுக்குக் கொண்டு போவதற்கே என்பதை நாம் காண்கிறோம் (அப்.9:2). இப்படிப்பட்ட ஒரு மனுஷனை ஆண்டவர் போய் தேடச் சொல்கிறார். நாமாயிருந்தால் என்ன செய்திருப்போம், சரி, சரி என்று சொல்லிவிட்டு யோனாவைப் போல ஓடியிருப்போம்.

எனக்கன்பான வாலிபனே, நமது வாழ்க்கையிலும் இயேசுவை பின்பற்ற தைரியம் அவசியமாயிருக்கிறது. நாமும் கூட நமது நண்பர்களிடம் அவரைப் பற்றி பேச வேண்டியதிருக்கும், பேசினால் அவர்களை இழந்து போவோமோ என்கிற பயம் நம்மை தாக்கும். ஆனால், நாம் என்ன செய்ய வேண்டும்? அனனியா என்ன செய்தார்? கர்த்தரிடம் கேட்கிறார், தன் மன ஐயத்தை வெளிப்படுத்துகிறார். தான் சவுலை குறித்து கேள்விப்பட்டதை கர்த்தரிடம் சொல்லி இப்படிப் பட்டவனை பார்க்க சொல்லுகிறீரே என்பது போல வினவுகிறான் (9:13,14). கர்த்தர் அவன் பயத்தை நீக்குகிறார், சவுல் நான் தெரிந்து கொண்ட பாத்திரம் என்கிறார் (9:15) அவன் என் நாமத்திற்காக பாடுபடுவான் என்கிறார் (9:16)

எனதருமை, வாலிப உள்ளங்களே! எளிதாக நம்பக்கூடிய செய்திகளா இவைகள். கொலை பாதகன், கொல்கொதாவில் மரித்து உயிர்த்தெழுந்த நமதாண்டவரின் பாத்திரமா, இது சாத்தியமா? உள்ளம் குமுறியிருக்கும் அல்லவா! சபையைப் பாடாய் படுத்தியவன், கிறிஸ்துவுக்காய் பாடுபடுவானா? அது எப்படி முடியும்! மனம் பதறியிருக்குமல்லவா? இது இயல்பான எண்ணம் தானே ! நானும், நீங்களும் இப்படித்தானே நினைத்திருப்போம். சீறிவந்த சிங்கத்தை போய் நேர்த்தெருவில் தேடி சந்தி என்கிறார் சிருஷ்டிகர். சிங்கம் என்னை எதாவது செய்துவிட்டால்! ஐயகோ எப்படிப்போவது? என்று பயந்து! யேசபேலுக்கு பயந்து ஓடின எலியாவைப் போல், இயேசுவோடிருந்த சீஷர்கள் இயேசுவை தனியே விட்டுப் பயந்து ஓடியது போல் இவனும் ஓடினானா? இல்லை அனனியா தைரியம் மிகுந்தவன். வசனம் “அப்பொழுது அனனியா போய்” என்று சொல்லுகிறது (9:17) தாமதம் செய்யவில்லை கர்த்தர் சொன்னவுடன் செய்தான், அப்பொழுதே செய்தான்.

கர்த்தருடைய வார்த்தைக்கு நாமும் இப்படித்தான் கீழ்ப்படிய வேண்டும். சில வேளையில் நமது மனதிற்கு அவர் சொல்லும் காரியங்கள் புரியாமலிருக்கலாம். தேவன் தனது தீர்க்கனாகிய ஏசாயாவைக் கொண்டு சொல்லுகையில், “என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்” எனத் திருவுளம்பற்றுகிறார். நம்முடைய வாழ்வில் எந்த சூழ்நிலையிலும் கர்த்தருடைய வார்த்தை என்ன விளம்புகிறதோ, அதை செய்கிறவர்களாய் இருந்திடல் நன்று (கொலோ 3:17). அனனியாவைப் போல நாமும் கர்த்தருடைய சொல்லுக்கு கீழ்ப்படிய வேண்டும். உடுக்கை இழந்தவன் கைபோல் தீவிரமாக நாம் அப்படிச் செய்ய வேண்டும்.

அனனியா பவுலிடம் சென்றது உண்மையில் ஒரு தைரியமான செயல் என்றால் அது மிகையல்ல, ஆனால் அதைவிட அவன் அங்கு

சென்ற பின், சொல்ல வேண்டிய அனைத்தையும் பவுலிடம் சொன்னான் என்பது அவனுடைய தைரிய மகுடத்தில் இன்னுமோர் முத்துப் பதிக்கிறது. நீ தாமதிக்கிறதென்ன, எழுந்து கர்த்தருடைய திருநாமத்தை தொழுது, திருமுழுக்குப்பெற்றுக்கொள், அதுதான் உன் பாவங்களைப் போக்கும் என்று தைரியமாய் கூறுகிறான் (அப் 22:16). நாமும் கூட வாலிபர்களே அன்புடன் சத்தியத்தை கூற வேண்டும். கிறிஸ்துவின் பெயரை சொல்லிக்கொண்டு, அந்தகார கிரியைகளை நடப்பிக்கிறவர்களை நாம் வெளிப்படுத்த வேண்டும். நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட திருவசனத்திற்காக, அந்த ஒரே சுவிசேஷத்திற்காக தைரியமாய்ப் போராட வேண்டும்.

எனக்கன்பான வாலிபனே ! பவுலிடம் சென்ற அனனியா, "இயேசுவை நேசி", "தேவன் என்னை அனுப்பினார், நீ புசியாமலும், குடியாமலும் இருந்தாய் உன் பாவம் மன்னிக்கப்பட்டது" "மோசேயின் பிரமாணத்தை வாசி, அதில் கிறிஸ்துவை பற்றி சொல்லியிருக்கும்" என்று பட்டும், படாமலும், தொட்டும், தொடாமலும் மழுப்பியிருந்தால் என்ன நடந்திருக்கும் சொல்லுங்கள் ! இவன், போனதும் வீண், தரிசனம் வீண், விசுவாசம் வீண், மொத்தத்தில் அனனியாவை பொறுத்தவரை எல்லாமே வீணாக இருந்திருக்கும். ஆனால், அனனியா அப்படி நடந்து கொள்ளவில்லை, அவன் தன் கிறிஸ்தவ வாழ்வில் விசுவாசத்தோடு தைரியத்தை கூட்டினவன். உறுதி கொண்ட நெஞ்சினன், இறைவனுக்காக பேசுவேன் எனத் தீர்மானித்து அதை நிறைவேற்றுவதில் எஃகென நெஞ்சுரம் படைத்தவன் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

அனனியா, பவுலிடம் சென்று பரமனின் தரிசனத்தைப் பற்றியும், திருசித்தத்தைப் பற்றியும் எடுத்துரைத்ததால் வந்த பலன்களை யோசித்தீர்களா? அனனியா சென்றதால், அப்போஸ்தலானகிய பவுல் நமக்கு கிடைத்திருக்கிறான். முத்தான மூன்று சுவிசேஷப்பயணங்கள், விளைவு ஆங்காங்கே சத்தான கிறிஸ்துவின் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டது. நமது புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய 14 நூல்களை எழுதியவன். எனக்கன்பானவர்களே ! இவையெல்லாம் அனனியாவுக்கு அப்போது தெரியுமா? இல்லையே ! இயேசு போகச் சொன்னார், போனான். நம்மையும் நமதாண்டவர் உலகமெங்கும் போக சொல்லியிருக்கிறார். நாமும் போவோம் ! எத்துனை தடைகள் வந்தாலும், சட்டதிட்டங்கள் வந்தாலும், சதியோசனை செய்து சமயம் பார்த்து சாத்தான் நம்மை விழுங்க நினைத்தாலும், உலகத்தை ஜெயித்தவர் நம்மோடிருக்கிறார். ஆகவே தைரியமாய் செல்வோம், சுவிசேஷம் சொல்லுவோம், உலகினை வெல்வோம், விளைச்சலை கர்த்தர் தருவார் ! ஆமென் !!

**ஜே. பிக்கின்ஸ்**



# சத்தியத்தின் விலை

சிறுவர் பகுதி

அன்பு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பட்ட நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த சிறுவர் பகுதியின் மூலம் பயனடைந்து தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாய் நடந்து வருகிறீர்கள் என நம்புகிறேன். சரி, இந்த மாதம் நாம் அறிந்து கொண்டுள்ள சத்தியத்தின் விலையை அதாவது மதிப்பை நாம் பார்க்கப் போகிறோம். அதற்காக நாம் சில வசனங்களை கவனமாக படிக்க வேண்டும். படிக்கத் தயாரா?

நம்முடைய தேவனின் அன்பையும், அவர் கொடுத்த கட்டளைகளின் மகத்துவத்தையும் பழைய ஏற்பாடு நமக்கு அழகாக விவரிக்கிறது. ஆராதனை முறையில் நாம் பழைய ஏற்பாட்டு முறையை கைகொள்ளக் கூடாது என்றாலும், தேவன் அவைகளின் மூலம் பல பாடங்களை கற்று தருகிறார் (ரோம. 15:4). அவைகளிலிருந்து நாம் சிறந்த பாடங்களை கற்றுக் கொள்ள முடியும்.

சரி, நீதி 23:23 என்ன கூறுகிறது தெரியுமா? **சத்தியத்தை வாங்கு அதை விற்காதே** என்று கூறுகிறது. இந்த வசனம் சத்தியத்தின் மதிப்பை அல்லது விலையை கூறுகிறது. அதை அடைவதற்கு நம்மால் முடிந்த எல்லா முயற்சிகளையும் நாம் இந்தச் சிறு வயதிலிருந்தே எடுக்க வேண்டும். தேவன் இதை தான் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இந்த சத்தியத்தை கற்றுக் கொள்வதற்கு கடும் முயற்சி தேவைப்படுகிறது. அத்தோடு, சில சமயங்களில் அதை அடைவதற்கு பல காரியங்களை நாம் இழக்கவும் நேரிடும்.

நம் இயேசுவானவரும் இதைப்பற்றி கூறியிருக்கிறார். எங்கே? மத் 13:44-46 வசனங்களில் அவர் இரண்டு உவமைகளை அவர் கூறுகிறார். ஞாபகம் இருக்கிறதா? ஆம். அங்கே ஒரு மனிதன் தான் கண்ட பொக்கிஷத்தை பெறும்படி தனக்குண்டான எல்லாவற்றையும் விற்றான் என்று பார்க்கிறோம். அதைப்போல ஒரு மனிதன் ஒரு முத்தை கண்டு அதைப் பெற்றுக் கொள்ளும்படி தனக்குண்டான எல்லாவற்றையும்

விற்றான் என்று பார்க்கிறோம். சரி, இயேசு எதற்காக இந்த உவமைகளை கூறுகிறார் தெரியுமா? ஆம், பரலோக ராஜ்ஜியத்தின் விலையை அல்லது மதிப்பை அவர் கூறுவதற்காகத்தான். அந்த ராஜ்ஜியத்தின் சத்தியத்திலேயும் பொக்கிஷம் அடங்கியிருக்கிறது.

யோவா 14:6 ல் **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றும் என்னையன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்** என்றும் இயேசு கூறுவதை நாம் காண முடியும். இங்கே பாருங்கள், தேவனுடைய சத்தியத்தின் மதிப்பை ! அது நம்மை பரலோகத்திற்கும், பரலோக பிதாவினிடத்திற்கும் அழைத்துச் செல்லுமாம்.

நம்மிடம் உண்மைச் சத்தியம் இருந்தால் அதை நாம் பத்திரமாக்கி கொள்ள வேண்டுமே தவிர பிறர் சொல்கிறார்கள் என்பதற்காகவோ அல்லது உலக ஆசைகளின் நிமித்தமாகவோ அதை நாம் விற்றுவிடக்கூடாது. அது விலையேறப்பட்டது. ஒரு தவறான காரியத்தை செய்ய பிறர் நம்மை தூண்டும் போதும் நாம் சத்தியத்தையும், சத்திய வழியையும் கைவிடக்கூடாது.

ஏனென்றால் யோவா 8:32 ல் **சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்று வசனம் கூறுகிறது. விடுதலை எவ்வளவு அற்புதமான ஆசீர்வாதம் தெரியுமா? ஆனால், அந்த விடுதலை என்ற ஆசீர்வாதம் நமக்கு சும்மா கிடைப்பதில்லை. தேவன் ஒரு நிபந்தனை கொடுக்கிறார். என்ன அது? I யோவா : 2:4 ல் **"அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனிடத்தில் சத்தியமில்லை"** என்று. எனவே சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படிந்து நடந்தோமானால் நமக்கு விடுதலையும், பரலோக பாக்கியமும் கிடைக்கும்.

நாம் நம்மால் முடிகிறவரை, இந்த சிறு பிராயத்திலிருந்தே சத்தியத்தை அறியவும், கடைபிடிக்கவும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். சத்தியத்தை நாம் பெற்றிருந்தால், அது எவ்வளவு பெரிய பொக்கிஷம் பாருங்கள் ! அது நமக்கு இப்பொழுதும் ஆசீர்வாதம் ! நமது வருங்கால வாழ்க்கைக்கும் ஆசீர்வாதம் !!

***R.A.R. Nayagam***

# விசுவாசத்தின் அடிப்படைகள்

இதுவரை நாம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இயேசுவின் உறவு குறித்து நான்கு காரியங்களைப் பார்த்தோம். இயேசு நமக்கு தேவன், கர்த்தர் (எஜமான்), கிறிஸ்து (மேசியா, ராஜா) மேலும் அவர் நம்முடைய பிரதான ஆசாரியர்.

***ஐந்தாவது இயேசு நம்முடைய நியாயாதிபதி***

அப். 17:30,31 யை வாசியுங்கள். தேவன் இந்த உலகத்தை நீதியாய் நியாயந்தீர்க்க ஒரு நாளை நியமித்திருக்கிறார். மரித்தோரிலிருந்து அவரால் எழுப்பப்பட்ட மனுஷன் அந்த நியாய தீர்ப்பை செய்வார். இயேசுதான் அந்த மனிதன் என்று இந்த வசனத்திலிருந்து நமக்கு விளங்குகிறது. தேவன் மேலும் சில வசனங்களினால் இதை தெளிவுபடுத்துகிறார்.

ரோ. 2:16 யை நாம் வாசிக்கும் போது "என் சுவிசேஷத்தின் படியே தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத் தீர்ப்பு கொடுக்கும் நாளிலே இது விளங்கும்" என்று வாசிக்கிறோம்.

II கொரி 5:10,11 ல் நாம் வாசிக்கும் போது "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். எனவே நீங்களும், நானும் இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு நாளும், நிமிடமும் அந்த நியாயத் தீர்ப்புக்கு நம்மை தயார்படுத்த வேண்டும். அதை நாம் புதிய ஏற்பாட்டில் இயேசு கட்டளையிட்ட காரியங்களை கவனமாகப் படிப்பதன் மூலமாகவும், தியானிப்பதன் மூலமாகவும் அதை கைக்கொள்ளப்பாடுபடுவதன் மூலமாகவும் செய்யலாம். அதை நீங்கள் செய்கிறீர்களா இல்லையென்றால் இன்றே செய்யத் தொடங்குங்கள்.

ஆறாவது இயேசு கிறிஸ்தவர்களின் சிறந்த நண்பன். இதைப்பற்றி வேதாகமத்திலிருந்து சில வசனங்களை நாம் பார்ப்போம். நீதிமொழி 17:17. சிநேகிதன் எல்லாக்காலத்திலும் சிநேகிப்பான் இடுக்கனில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்.

நீதிமொழி 18:24 சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும். சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு.

நீதிமொழி 27:9 பரிமள தைலமும் சுகந்த தூபமும் இருதயத்தைக் களிப்பாக்குவது போல ஒருவனுடைய சிநேகிதன் உட்கருத்தான ஆலோசனையினால் பாராட்டும் இன்பமானது களிப்பாக்கும்.

ரூத் 1:16,17 நகோமிக்கு ரூத் எவ்வளவு அருமையான சிநேகிதியாயிருக்கிறாள்! ரூத் நகோமியிடம் பேசிய வார்த்தைகள் அந்த அருமையான சிநேகிதத்துவத்தை விளக்குகிறது.

1. ரூத் நகோமியைப் பிரிய மனதில்லாதிருந்தாள்
2. அவள் நகோமியைப் பின்பற்ற விரும்பினாள்
3. அவள் நகோமி செல்லும் இடத்திற்கு சென்று வாழ விரும்பினாள்.
4. அவள் நகோமியின் நண்பர்களை தன்னுடைய நண்பர்களாக ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருந்தாள்.
5. அவள் நகோமியின் தேவன் தன்னுடைய தேவன் என்று தீர்மானித்தாள்.
6. அவள் நகோமி மரிக்கும் இடத்திலேயே மரித்து அங்கேயே அடக்கம் பண்ணப்படவும் விரும்பினாள்.
7. அவள் நகோமியிடமிருந்து மரணமேயல்லாமல் வேறொன்றும் தன்னை பிரிக்கக்கூடாது என்றும் விரும்பினாள்.

நாம் இந்த பட்டியலுடன் நீதிமொழிகள் புஸ்தகத்தில் தேவன் சிநேகிதனைப் பற்றி சொன்ன விளக்கத்தோடு சேர்த்துக் கொள்வோம்.

8. சிநேகிதன் எல்லாக்காலத்திலும் சிநேகிப்பான்.
9. சிநேகிதன் சகோதரனிலும் அதிக சொந்தமாய் சிநேகிப்பவன்.
10. சிநேகிதன் ஞானமான ஆலோசனையைக் கொடுப்பவன்.

இவைகளை மனதில் கொண்டு ஒரு கிறிஸ்தவனுக்கு இயேசு எதனால் சிறந்த நண்பராக இருக்கிறார் என்பது பற்றி நான்கு காரியங்களை பார்ப்போம்.

1. முதலாவது இந்தப் பூமியில் அவருடைய வாழ்க்கை
2. இரண்டாவது நமக்காக அவருடைய பாடுகளும், தாழ்மையும்
3. மூன்றாவது அவருடைய மரணமும், இரத்தம் சிந்துதலும்
4. நான்காவது அவருடைய உயிர்த்தெழுதலும், நிகழ்கால ஆட்சியும்.

## ***இந்த உலகத்தில் இயேசுவினுடைய வாழ்க்கை***

இயேசு கிறிஸ்துவுடைய வாழ்க்கையைப் பற்றி கீழ்க்காணும் அற்புதமான காரியங்களை தியானியுங்கள்.

லூக். 19:10 யை வாசியுங்கள். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே நம்முடைய அருமையான இரட்சகர் இந்த உலகத்திற்கு வந்தார். அதாவது பாவத்தில் இழந்து போன மனித இனத்தை தேடவும், இரட்சிக்கவும் அவர் வந்தார்.

மத்தேயு 1:21 ல் நாம் வாசிக்கும் போது நம்முடைய மீட்பர் தம்முடைய ஜனங்களை பாவத்திலிருந்து இரட்சிக்க வந்தார். யோவான் 6:33-35 யை வாசியுங்கள். இயேசு ஜீவ அப்பமாக வந்தார். அதாவது அவர் தம்முடைய வசனத்தின் மூலமாக ஆவிக்குரிய ஜீவனையும், ஆவிக்குரிய ஆகாரத்தையும் அளிக்க வந்தார்.

யோ. 6:68 ல் நம்முடைய இரட்சகர் நித்திய ஜீவனுள்ள வார்த்தைகளை நமக்கு தரும்படி வந்தார். அவருடைய வார்த்தைகள் அவருடைய புதிய ஏற்பாட்டில் இருக்கிறது. அவைகளை நாம் கைக்கொள்வோமானால் தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை இவைகளின் மூலமாக நாம் நித்திய ஜீவனைப் பெறுவோம்.

யோ. 8:12 ல் நாம் வாசிக்கும் போது இயேசு இந்த உலகத்திற்கு ஒளியாக வந்தார். நாம் அவரை பின்பற்றினால் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைவோம்.

யோ. 10:10 யை வாசியுங்கள். நாம் ஜீவனைப் பெறவும் அது பரிபூரணப்படவும் அவர் வந்தார். ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனுக்கு இந்த உலகத்தில் ஒரு சிறந்த வாழ்க்கை இருக்கிறது. அது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினால் நிரம்பின வாழ்க்கை. அந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கிறது. ஒரு நோக்கம் இருக்கிறது. நமக்கு பரலோகத்திலும் நித்தியஜீவனின் நம்பிக்கை இருக்கிறது.

யோ. 11:25,26 யை நாம் வாசிக்கும் போது இயேசு தைரியமாக நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்றார். அது இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்ததற்கான காரணங்களுள் ஒன்றாகும். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறபடியால் நீங்களும், நானும் அவரை விசுவாசித்தால் நாம் சரீரப் பிரகாரமாக மரித்தாலும், நாம் நித்தியமாக மறுபடியும் வாழ்வோம். இந்த நித்திய ஜீவனை நாம் பெற கீழ்ப்படிதலுடன் கூடிய ஜீவனுள்ள விசுவாசம் நமக்கு தேவை. வெறும் விசுவாசம் மாத்திரம் இருந்தால் போதாது. மேலும் இந்த வசனங்களில் நம்முடைய இரட்சகர் சொல்லும் போது நாம் அவரை விசுவாசித்து அவருக்குள் இருந்தால் நாம் மரிப்பதில்லை என்றும் சொல்கிறார். அதாவது நாம் ஆவிக்குரிய மரணத்தையும், நரகத்தில் தேவனிடத்திலிருந்து நித்திய பிரிவையும் அனுபவிப்பதில்லை.

யோ. 14:6 யை வாசியுங்கள். "அதற்கு இயேசு நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றார். நம்முடைய இரட்சகர் வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் இந்த உலகத்திற்கு வந்தார்.

பரலோகம் செல்வதற்கான அந்த ஒரே வழியை இயேசு நமக்கு காட்டியிருக்கிறார். அவர் சத்தியத்தின் உருவமாயிருக்கிறார். அவர் வழியே ஜீவ வழி இந்த உலகத்தில் சிறந்ததற்கும் வருகின்ற உலகத்தில் நித்திய ஜீவனுக்கும் இயேசுவின் வழியே ஜீவ வழி. இந்த காரணங்களுக்காக என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று இயேசு சொன்னார்.

I பேதுரு 2:21 ல் நாம் வாசிக்கும் போது நாம் அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு ஒரு மாதிரியை பின் வைத்துப் போகும்படி இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். பிதாவைப் பிரியப்படுத்த எப்படி வாழ வேண்டும் என்பதை காட்டுவதற்காக இயேசு இந்த உலகத்திற்கு வந்தார்.

இயேசு நமக்கு எந்த வகையான மாதிரியை கொடுத்தார். யோ. 6:38ல் நாம் வாசிக்கும் போது அவருடைய முக்கிய நோக்கம் பிதாவின் சித்தத்தை செய்வது தான். அவருடைய சித்தத்தை அல்ல. என்ன ஒரு தன்னலமற்ற கீழ்ப்படிதலுள்ள உதாரணம் பாருங்கள் ! நாம் அதைப் பின்பற்ற வேண்டும். மத்தேயு 3:15 யை வாசியுங்கள். எல்லா நீதியையும் நிறைவேற்றுவதே அவருடைய விருப்பமாக இருந்தது. அவைகளை அவர் பிதாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக நிறைவேற்றினார். சங் 119:172 ல் நாம் வாசிக்கும் போது தேவனுடைய கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்.

அப். 10:38 ல் நாம் வாசிக்கும் போது நம்முடைய அருமை இரட்சகர் இந்த உலகத்தில் எப்படி வாழ்ந்தார் என்று மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அதாவது அவர் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார் என்று நாம் வாசிக்கிறோம்.

பிலிப்பி. 2:5-8ல் நாம் வாசிக்கும் போது இயேசு தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து சிலுவையின் மரண பரியந்தமும் தம்மைத் தாழ்த்தினார். இயேசு உங்களுடைய பாவத்திற்காகவும் என்னுடைய பாவத்திற்காகவும் அப்படி செய்தார்.

மாற்கு. 7:37 யை வாசியுங்கள். மனித குலத்தின் மீட்பர் எல்லாவற்றையும் நன்றாக செய்தார். இயேசு தம்மால் சிறந்ததை செய்யும் வரை திருப்தி அடையவே இல்லை. நீங்களும் நானும் எப்படி?

I யோ. 3:8 யை நாம் வாசிக்கும் போது பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரனாகிய இயேசு வெளிப்பட்டார் என்று நாம் வாசிக்கிறோம். அவர் இந்த உலகத்தில் வாழும் போது தம்முடைய பூரண ஜீவியத்தின் மூலமாக பிசாசினுடைய கிரியைகளை அழித்தார்.

II கொரி 8:9 யை வாசியுங்கள். நம்முடைய அருமை இரட்சகர் பரலோகத்தில் ஐசுவரியராக இருந்தும் நமக்காக தரித்திரராகி இந்த உலகத்திற்கு வந்து ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்தார். நாம் அவருடைய தரித்திரத்தினால் ஆவிக்குரிய பிரகாரமாக ஐசுவரியராகும்படி அவர் அப்படி செய்தார். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சிலாக்கியம் பெற்றிருக்கிறோம் (எபேசியர் 1:3).

தெளிவாக இயேசு இந்தப் பூமிக்கு வந்ததற்கான காரணங்களுள் ஒன்று நம்முடைய நண்பராக இருப்பதற்கு என்று பார்த்தோம். அவருடைய மாசற்ற மாதிரியை நாம் பின்பற்றுவோமாக !

Benny Charlie DiPalma

## கிறிஸ்து

***கிறிஸ்து வழியாகயிருக்கிறார் :***

அவரில்லாதவன் காயீனைப் போல நாடோடியாய் அலைகிறான்.

***கிறிஸ்து சத்தியமாயிருக்கிறார் :***

அவரில்லாதவன் பொய்யனும், பொய்யிக்குப் பிதாவுமான சாத்தானைப் போலிருக்கிறான்.

***கிறிஸ்து ஜீவனாயிருக்கிறார் :***

அவரில்லாதவன் உயிரற்ற உடல் போல பாவத்தில் மரித்தவனாய் இருக்கிறான்.

***கிறிஸ்து ஒளியாயிருக்கிறார் :***

அவரில்லாதவன் இருளில் குருடனைப் போல நடந்து போகிறான். அவன் போகுமிடத்தையும் அறியான்.

***கிறிஸ்து திராட்சைச் செடியாயிருக்கிறார் :***

அவரில்லாதவன் காய்ந்து போன கொடிகளாய் அக்கினிக்கு இரையாகயிருக்கிறான்.

***கிறிஸ்து கன்மலையாகயிருக்கிறார் :***

அவர் மேல் கட்டாதவன், நியாயத் தீர்ப்பு என்னும் வெள்ளத்தால் அழிந்து போவான்.

# ஒன்றை நான் கேட்டேன் ...

**ந**ம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன். இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிற பெரும்பாலான மனிதர்கள் ஏதோ ஒரு நோக்கத்தோடும், இலட்சியத்தோடும் வாழ்ந்து கொண்டு இருப்பார்கள். நாம் அநேகரிடம் பேசிக் கொண்டு இருக்கும் போது "நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்" என்று கேட்டால் "பெரிய பணக்காரனாக வாழ வேண்டும்" என்றும், "பெரிய சாதனைகளை செய்ய வேண்டும்" என்றும் பல எட்டாத ஆசைகளை வெளிப்படுத்துவார்கள்.

பள்ளி பருவத்திலே படித்து கொண்டு இருக்கிற குழந்தைகளை கேட்டால் "நான் மருத்துவராகுவேன்", "பொறியியல் வல்லுனராகுவேன்" என்று மழலை மொழியில் பெருமையாக சொல்லும். இப்படி உலகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிற சிறியோர் முதல் பெரியோர் வரைக்கும் தங்கள் இலட்சியங்களை இப்படி சொல்லும் போது, பரலோகத்துக்கு பாக்கியவான்களாகிய நாம் எந்த இலக்கோடும், இலட்சியத்தோடும் இந்த பூமியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்?

நம்முடைய ஜீவ புஸ்தகமாகிய வேதாகமம், கிறிஸ்தவர்களாகிய நாம் இலக்கோடு தான் வாழ வேண்டும் என்று அறிவுறுத்தி சொல்லுகிறது. அது என்னவென்றால், உலக மக்களை போல அநேக நோக்கத்தோடு வாழாமல் **"ஒரே ஒரு"** இலக்கோடு தான் நாம் வாழ வேண்டும் என்று புத்தி சொல்லுகிறது. அதைக்குறித்தான காரியங்களை வேத வசனங்களோடு நாம் கற்றுக் கொள்வோம்.

## ஒன்றை நான் கேட்டேன்

நம்முடைய வேதாகமம் இரண்டு பெரும் பிரிவுகளை கொண்டது என்று நாம் அறிந்திருக்கிறோம். இது பழைய ஏற்பாடு என்றும், புதிய ஏற்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டு வேதாகமப் பகுதிகளில் ராஜாக்களின் நாட்களை குறித்து நாம் நிச்சயமாக ஓரளவு அறிந்திருப்போம். அப்படி வாழ்ந்த இராஜாக்களில் மிகச் சிறப்பு வாய்ந்த ராஜாக்களை நாம் விரல் விட்டு எண்ணி விடலாம்.

அவர்களில் மிகவும் சிறப்பானவன் யார் என்று கேட்டால் நம் மனது தரக்கூடிய பதில் நிச்சயம் தாவீதாகத்தான் இருக்கும். ஏனென்றால் வேதாகமம் இவனை "தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனிதன்" (அப் 13:22) என்ற சிறப்பு பெயரை கொடுத்து இருப்பதுதான். ஏனென்றால், இவனுடைய

ஆவிக்குரிய வாழ்க்கை இவனுக்கு முன்பு, பின்பு வந்த ராஜாக்களைக் காட்டிலும் மிகச் சிறப்பாகவே இருந்தது.

தாவீதின் வாழ்க்கையில் யுத்தங்களும், சண்டைகளும், போர்களும் ஓய்ந்து போய்விட்ட சூழ்நிலையில் சவுல் மரிக்க, அவனுடைய ராஜ்ஜிய பாரத்தை தாவீது ஏற்றுக் கொள்கிறார். ராஜ்ஜியபாரம் நிலையான கொஞ்ச நாளில் தன் மகனாகிய அப்சலோம் ராஜ்ஜியத்தை கைப்பற்றிக் கொள்ள, அவனுக்கு பயந்து தன் உயிரை கையில் பிடித்துக் கொண்டு மறுபடியும் ஓடினான். (II சாமு 15:14,30) இவ்வளவு பிரச்சனைகளும், சோதனைகளும், துன்பங்களும், சஞ்சலங்களும் தன் வாழ்க்கையில் இருந்தும் அவன் தன்னுடைய சங்கீதத்தில் இப்படியாக எழுதுகிறான் பாருங்கள். **"கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்"** (சங் 27:4) என்று கூறுகிறார்.

இவ்வளவு பிரச்சனைகளின் மத்தியில் இருக்கக்கூடிய தாவீது அப்படி என்ன தான் கேட்க போகிறார். நாம் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து இருப்போமானால் "என் எதிரிகள் நிர்மூலமாக வேண்டும்", "என் ராஜ்ஜிய பாரம் நிலைவரப்பட வேண்டும்", "எல்லா யுத்தங்களிலும் நானே ஜெயிக்க வேண்டும்" என்று தான் கேட்டு இருப்போம். ஆனால் தாவீதோ அப்படி கேட்காமல் ஒன்றை மாத்திரமே கேட்கிறார். அது என்னவென்றால் "கர்த்தருடைய மகிமையை பார்க்கும் படியாகவும், கர்த்தருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும் படியாகவும், என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" (சங் 27:4) என்று.

பிரியமானவர்களே, பாருங்கள். தாவீது மிகப்பெரிய தேசத்து ராஜாவாக இருந்தும் அநேக அரசாங்க அலுவல்களும், பிரச்சனைகளும் இருந்தும் கூட, தேவனுடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே அதிகமாக நாடியிருக்கிறார் (சங் 27:4). ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய கிறிஸ்தவர்களை பார்த்தால் நமக்கு வேதனையாகத்தான் இருக்கிறது. கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக பல பாடுகள் பட்டு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்தார்.

இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இவ்வளவு பெரிய தியாகத்தை செய்திருக்கிறார். ஆனால், அதைக் குறித்து கொஞ்சமும் நாம் கவலைப்படுவதில்லை. நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற போது இருக்கின்ற விசுவாசம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து பின்பு நாளடைவில் அதுவும் காணாமல் போய்விடுகிறது.

கிறிஸ்துவுக்கு பிரியமானவர்களே கிறிஸ்துவின் தியாகத்தை குறித்து அறியாத காலத்தில் வாழ்ந்த தாவீதுக்கே அப்படிப்பட்டதான பக்தி வைராக்கியமும், விசுவாசமும் இருக்குமென்றால் கிறிஸ்துவின் தியாகத்தை

அறிந்தும், படித்தும், உணர்ந்தும் இருக்கிற நமக்கு எப்படிப்பட்டதான விசுவாசமும், பக்தி வைராக்கியமும் இருக்க வேண்டும். ஆனால், கிறிஸ்தவர் களாகிய நாம் அதைக்குறித்து கொஞ்சமும் கவலைப்படுவதில்லை.

ஏனென்றால், சபை கூடி வரும் போது பெரும்பாலானவர்கள் ஆராதனைக்கே வருவதில்லை. நாம் அவர்களிடம் ஆராதனைக்கு ஏன் வரவில்லையென்று கேட்டால் எனக்கு வீட்டு வேலை அதிகமாக இருந்தது குடிதண்ணீர் வந்து விட்டது வேலைக்கு போய்விட்டேன் வீட்டுக்கு விருந்தாளிகள் வந்து விட்டார்கள் என்று மோசேயைப் போல் தேவனுடைய காரியத்தில் சாக்கு போக்கு சொல்கிறோம்.

இன்னும் சில கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் ஆராதனைக்கு ஒழுங்காக வருவார்கள். ஆனால் அவர்களின் விசுவாசம் காலை ஆராதனையின் தொடக்கம் முதல், முடிவு வரைக்கும் தான் இருக்கும். பின்பு, அந்த விசுவாசமும், பக்தி வைராக்கியமும் சபை முடிந்து வெளியே வருகின்ற போது தொலைந்து போய் விடும்.


பிரியமானவர்களே, இதுவா கிறிஸ்தவ வாழ்க்கை?. நம்முடைய தாவீதை கவனித்துப் பாருங்கள். இஸ்ரவேலின் ராஜா தான், அவனுக்கு எவ்வளவோ அலுவல்கள் இருந்தாலும், பிரச்சனைகள் இருந்தாலும் அவன் தேவனிடத்தில் ஒன்றை மாத்திரமே கேட்டான். அது தேவனுடைய ஆலயத்தில் தங்கியிருப்பதும் அவருடைய வேதாகமத்தை ஆராய்ச்சி செய்வதுமே என்று திட்டமாக கூறுகிறான்.

தாவீது ராஜாவை காட்டிலுமா நமக்கு அலுவல்களும், பிரச்சனைகளும், வேலைகளும் இருக்கிறது? சொல்லுங்கள். எபிரெய ஆசிரியரின் எச்சரிப்பை பாருங்கள். **சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்** (எபி 10:25) என்று எச்சரிக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் வருகை வெகு சமீபமாக இருக்கிறது. ஆகையால் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள். இன்னமும் கிறிஸ்தவர்களாகிய நாம் ஆராதனைக்கு போகாமல் காரண காரியங்களை தேடி கண்டுபிடித்துச் சொல்லிக் கொண்டு இருக்காமல், சபை கூடிவரும் போது அதிக உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும், வேத வசனங்களை ஆராய்ந்து பார்த்து கற்றுக் கொள்வோம் "ஒன்றை மாத்திரமே கேட்போம்!" நித்திய ஜீவனுக்கு பங்காளியாவோம் ! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**N. பர்னபாஸ்**

**திருப்பூர்.**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-


# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

# ஓர் இனிய செய்தி


**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவச பயிற்சி.**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




## ராஜ டிவி யில்

## திருமறை தியானம்

பிரதி புதன்கிழமை காலை 6.05 - 6.20 மணி

## தமிழன் டிவி யில்



## திருமறை தியானம்

பிரதி சனிக்கிழமை காலை 7.15 - 7.30 மணி


Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.

Design by: Sun, Kgm. Ph: 222555